www.agaram.lk

FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, மார்ச் - 2020

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :- 13 (2020) | தொடர்பாடலும் ஊடககற்கையும் I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

❖ **1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளடித்தாளில் புள்ளடியிடுக.**

01. தொழில்சார் தொடர்பாடுநர்கள் இயந்திர ஊடகங்களின் துணையோடு பரந்த அளவிலும் உடனடியாகவும் தொடர்ச்சியாகவும் விசாலமான பல்வேறு விதமான பெறுநர் கூட்டத்திற்குத் தகவல் அனுப்பி யாதேனும் தாக்கத்தினை ஏற்படுத்தும் செயற்பாடு வெகுசனத் தொடர்பாடல் என வரையறை செய்த அறிஞர்கள்
   1) ஹாய்பர்ட், அன்குராய்ட்   2) டெவுளர், டெனிஸ்   3) டெவுளர், ஹய்பர்ட்
   4) டெவுளர், அன்குராய்ட்   5) போன், ஹாய்பர்ட்

02. தொடர்பாடல் செயலொழுங்கில் குறிமுறையாக்கம் குறிமுறையவிழ்ப்பு தொடர்பாக முதன் முதலில் கருத்தியலை உருவாக்கிய அறிஞர்கள்.
   1) சாள்ஸ் ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம்
   2) ஹரோல் டி. லாஸ்வெல்
   3) குளோட் ஷனேன் மற்றும் வொரன் வீவர்
   4) அரிஸ்ரோட்டில்
   5) போல் லசார் பீல்ட்

03. தொடர்பாடுநர் தகவலை வழங்கிய பின் அதனைப் பெறுபவர் அது தொடர்பாக அவதானிக்க கூடியவாறான ஒரு எதிர்வினையை வெளிப்படுத்தி கொள்ளும் செயன்முறையை அடையாளப்படுத்துவது.
   1) உச்சஸ்தானம்   2) சந்தர்ப்பம்   3) இரைச்சல் / இடையூறு
   4) பின்னூட்டல்   5) தாக்கம் / விளைவு

04. தகவல்கள் அடங்கிய குறியீடுகளினை அடிப்படையாகக் கொண்டு இரு சாராருக்குமிடையில் ஒரே மாதிரியான அல்லது ஒருமித்த மனநிலையை ஏற்படுத்துவதே தொடர்பாடலாகும் என வரை விலக்கணப்படுத்தியவர்.
   1) வில்பர் ஷ்ராம்   2) ஹரோல் டி. லாஸ்வெல்   3) ஷனோன் மற்றும் வீவர்
   4) சாள்ஸ், எச், கூலி   5) டெனிஸ் மக்குவல்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

05. வெளியாட்களின் தலையீட்டு மற்றும் வெளிநிலை கருவிகளின் தேவைப்பாடுகள் இன்றி நடைபெறக்கூடிய தொடர்பாடல் வகை.

1) ஆளுள் தொடர்பாடல் (தனியாள் தொடர்பாடல்)
2) ஆட்களிடைத் தொடர்பாடல்
3) குழுத்தொடர்பாடல்
4) வெகுசனத் தொடர்பாடல்
5) வாய்மொழி சாராத தொடர்பாடல்

06. பின்வரும் அம்சங்களுள் தொடர்பாடல் செயன்முறை ஒன்றில் அடிப்படை அம்சமாக காணப்படாதது.

1) தொடர்பாடுநர் 2) தகவல் 3) பெறுநர் 4) ஊடகம் 5) வாயிற்காப்பு

07. அன்றாடத் தொடர்பாடலில் அதிகளவு கொள்திறன் கொண்ட தொடர்பாடல் வடிவம்.

1) வாய்மொழித் தொடர்பாடல் 2) கட்புலத் தொடர்பாடல் 3) பேச்சுத் தொடர்பாடல்
4) செவிப்புலத் தொடர்பாடல் 5) முறைசாராத் தொடர்பாடல்

08. இலங்கையில் தமிழில் ஊடககற்கை துறைசார்ந்த பட்டப்படிப்புக்களினை வழங்கும் பல்கலைக்கழகம் எது.

1) கொழும்புப் பல்கலைக்கழகம்
2) கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகம்
3) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
4) கொழும்பு பல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகம்
5) தெஹிவளை களிஸ்ட பல்கலைக்கழகம்

09. அன்றாட வாழ்விற்குத் தேவையான தகவல்கள் அடங்கிய குறிக்கப்பட்ட காலப்பகுதியில் தொடர்ந்து வெளிவரும் ஒன்றிணைந்து கட்டப்பட்ட வெளியீடு என யுனஸ்கோ வரையறை செய்யும் வெகுசன ஊடகம்.

1) பத்திரிகை 2) சஞ்சிகை 3) புத்தகம் 4) வானொலி 5) துண்டுப்பிரசுரம்

10. பின்வரும் விடயங்களில் வெகுசன ஊடகங்களின் இயல்புகளோடு தொடர்புபடாத அம்சம்

1) தொழில்நுட்ப சாதனப் பயன்பாடு அவசியமானது
2) கண்ணுக்கு எட்டப்படும் மக்களுக்கு மாத்திரமே தகவல் வழங்கப்படும்
3) ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு காணப்படும்
4) வாயிற்காப்புச் செயன்முறையோடு தொடர்புடையது
5) பெரும்பாலும் இலாபத்தை அடிப்படையாக கொண்டது

11. வானொலி ஊடகத்தின் இயல்புகளோடு தொடர்புடைய விடயமல்லாதது.

1) விரைவான செய்திக்கடத்துகை நடைபெறும்
2) முழு வலயத்தினையும் உள்ளடக்க கூடியது
3) எளிமையான மொழிநடை பயன்படுத்தப்படும்
4) பேசுவோன் கேட்போன் சம நேரத்தில் தொடர்பாடுவார்
5) மிகவும் செலவு கூடிய ஊடகமாகும்

12. உலகளாவிய ரீதியில் அதிகூடியளவான மக்கள் பயன்படுத்தும் சமூக ஊடகம்

1) முக நூல் (Face book) 2) ருவிட்டர் (Twitter) 3) லிங்க்டின் (Linkedin)
4) இன்ஸ்டகிராம் (Instagram) 5) பின்ட்ரஸ்ட் (Pinterest)



agaram.lk


www.agaram.lk

13. அறிவு, பழக்கவழக்கங்கள், கலைகள், சட்டங்கள், விழுமியங்கள், சம்பிரதாயங்கள் மற்றும் சமூகப்பிராணி என்ற வகையில் ஏனைய ஏதேனும் முறைகளால் மனிதன் பெற்றுக்கொண்டுள்ள பழக்கங்கள் மற்றும் ஆற்றல்கள் அடங்கிய அம்சம் பண்பாடு என வரைவிலக்கணப்படுத்துபவர்.
1) மார்கஸ் போர்சியஸ் 2) இ. பி. ரெய்லர் 3) பி. மலினோவுஸ்கி
4) ரல்ப் லிண்டன் 5) போராசிரியர் விமல்திசநாயக்கா

14. பின்வரும் கருத்தியல்களில் சமூகமயமாக்கம் எனும் எண்ணக்கருவுடன் தொடர்புபடாத கூற்று.
1) குழந்தை பிறந்தது முதல் நடைபெறும் ஒரு செயலெழுங்கு
2) குடும்பம் சமூகமயமாக்கலை ஏற்படுத்தும் உயிரியல் அமைப்பாகும்
3) சமூகமயமாக்கம் குறிப்பிட்ட வயதோடு மட்டுப்படுத்தப்படும் ஒன்றாகும்
4) சமூகமயமாக்கத்தினை ஏற்படுத்துவதில் வெகுசன ஊடகங்களும் பங்காற்றுகின்றன
5) சமூகமயமாக்கம் போலச்செய்தல் வகிபாகம் ஏற்றல் பின்பற்றுதல் வாயிலாகவும் நடைபெறும்

15. வகுப்பறை ஒன்றில் ஒரு தொகுதி மாணவர்களிடையே நடைபெற்ற கலந்துறையாடல் பின்வருமாறு.
ரணில் - ஆழமற்ற ஒன்றாக காணப்படுகின்றமை
அணில் - வியாபார நோக்கத்தினை அடிப்படையாக கொண்டது
சுணில் - மேலைத்தேய மயமாக்களின் விளைவாக உருவானது
கவின் - அடிக்கடி மாற்றங்களிற்கு உள்ளாக கூடிய தன்மை
அகில் - வெகுசனப் பண்பாட்டின் உபபிரிவாக தோற்றம் பெற்றமை
மேற்குறிப்பிட்ட கலந்துயைாடலில் தெரிவித்த கருத்தியல்களினை புலப்படுத்தும் பண்பாடு
1) வெகுசனப் பண்பாடு 2) ஊடகப் பண்பாடு
3) மரபார்ந்த (செவ்வியல்) பண்பாடு 4) பிரசித்த பண்பாடு 5) பூகோளப் பண்பாடு

❖ **பின்வரும் மாதிரி உருவினை அடிப்படையாக கொண்டு அதன் கீழ் உள்ள 16 தொடக்கம் 20 வரையாக வினாக்களுக்கு விடை தருக.**




16. மேற்குறித்த மாதிரி உருவினை அடிப்படையாக கொண்டு குறிப்பிட்ட தகவல் தொடர்பாடப்படும் விடயத்தினை சுட்டிக்காட்டும் எழுத்து.
1) D ஆகும் 2) C ஆகும் 3) B ஆகும்
4) A ஆகும் 5) பெயரிடப்படாத பகுதி ஆகும்

17. மேற்குறிப்பிட்ட அம்சங்களில் குறிமுறையாக்கம், குறிமுறையவிழ்ப்பு செயற்பாடு நடைபெறுமாயின் அதனை வெளிப்படுத்தி நிற்பது.
1) A மற்றும் B இல் 2) B மற்றும் C இல் 3) B மற்றும் D இல்
4) A மற்றும் D இல் 5) C மற்றும் E இல்

18. மேற்குறித்த மாதிரி உருவானது தொலைபேசி பரிவர்த்தனயை அடிப்படையாக கொண்டு முன்வைக்கப்பட்ட போது தொடர்பியலாளனால் முன்வைக்கப்பட்ட தகவல் பெறுநரை சென்றடையவில்லை அதனை வெளிப்படுத்திக் காட்டுவது.
1) A 2) B 3) C 4) D 5) E



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

19. மேற்குறித்த மாதிரி உருவின் அடிப்படையில் அதன் இயல்புகளோடு தொடர்புபடாத அம்சம்.
1) ஒரு வழித்தொடர்பாடல் தன்மையை புலப்படுத்துவது
2) தொலைபேசித் தொடர்பாடல் தன்மையை அடிப்படையாகக் கொண்டது
3) பின்னூட்டல் செயன்முறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது
4) நேர்வழித்தன்மையை அடிப்படையாக கொண்டது
5) வட்டச்சுற்றுப் பாய்ச்சலுக்கு எதிரான தன்மையைக் கொண்டது

20. மேற்படி மாதிரியின் தன்மையினை அடிப்படையாக கொண்டு அதையொத்த மாதிரி உருவினை முன்வைத்தவர்கள் / முன்வைத்தவர்.
1) ஹரோல் டி. லாஸ்வெல்
2) குளோட் ஷனோன் மற்றும் வொரன்வீவர்
3) சாள்ஸ் ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம்
4) அரிஸ்ரோட்டில்
5) டேவிட் .கே. பெர்லோ

21. தரம் 13 இல் ஊடாக கற்கை பாடத்தினை பயிலும் மாணவர்களில் ஒரு தொகுதியினரிடையே இடம் பெற்ற கலந்துரையாடல் வருமாறு.

கோபி - எழுத்துக்களை எழுதும் வாசிக்கும் ஆற்றல் விளங்கறிவு என குறிப்பிடப்படுகின்றது
தபேதன் - ஊடகங்களினை ஆய்வு செய்தல் ஊடக விளங்கறிவு எனலாம்
திவேதன் - ஊடக விளங்கறிவு ஒருவரது பிறப்போடு தொடர்புடைய ஒன்றாகும்
வைஸ்ணவன் - ஊடகத்தால் முன்வைக்கப்படும் தகவலை பகுப்பாய்வு செய்யும் ஆற்றல்
பிரியங்கன் - ஊடகம் கொண்டுவரும் நன்மையான விடயங்களினை மாத்திரம் ஆராய்தல்

மேற்குறிப்பிட்டவர்களில் ஊடகவிளங்கறிவு பற்றிய கருத்தியல்களினை முன்வைத்தவர்கள்.
1) தபேதன், திவேதன், வைஸ்ணவன்
2) கோபி, தபேதன், திவேதன்
3) கோபி, வைஸ்ணவன், பிரியங்கன்
4) கோபி, தபேதன், திவேதன், வைஸ்ணவன்
5) கோபி, தபேதன், திவேதன், வைஸ்ணவன், பிரியங்கன்

22. ஏதாவது ஊடகப்படையொன்றின் தரம் தொடர்பில் அய்வுகளினை மேற்கொள்ளும் செயற்பாடு அழைக்கப்படுவது.
1) ஊடக விளங்கறிவு 2) ஊடகத் திறனாய்வு 3) ஊடகப் படைப்பாக்கம்
4) பொதுமக்கள் தொடர்புதிட்டம் 5) ஊடகப்பண்பாடு

23. விமர்சன ரீதியான பெறுநரிடம் காணப்பட வேண்டிய பண்புகளோடு தொடர்புபடாதது
1) உய்த்தறிதல் திறன் 2) பகுப்பாய்வுத் திறன் 3) மதிப்பீடு செய்யும் திறன்
4) சாராம்சப்படுத்துதல் 5) செய்தியை உருவாக்கல்

24. எதிர்பார்த்த பெறுபேறுகளை முன்வைக்கும் போது வெற்றியினை அடைதல் வினைத்திறனாகும். வினைத்திறனான தகவலில் காணப்படும் பண்புகளோடு தொடர்புபடாத அம்சம்.
1) எளிமைத்தன்மை (Simplicity) 2) விசேட தன்மை (Specificity)
3) கட்டமைப்பு (Structure) 4) திரிபுபடுத்தல் (Distortion)
5) இசைவாக்கம் (Stickiness)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

25. ஏதேனும் ஒன்றினை உருவாக்குதல் அல்லது புதிது புனைதல் படைப்பாக்கம் எனலாம். அந்த வகையில் படைப்பாக்கம் ஒன்றின் அடிப்படை கூறுகளோடு தொடர்புபடாத அம்சத்தை வெளிப்படுத்துவது.
1) படைப்பாக்கத்திறன் 2) படைப்பாக்க ரீதியிலான சிந்தனை
3) புலக்காட்சி 3) படைப்பாளி 5) படைப்பாக்க எழுத்து

26. தொடர்பாடல் ஊடக கற்கை துறையில் மிக அண்மைய காலத்தில் கலைவடிவமாக அங்கீகரிக்கப்பட்ட ஊடக வழிமுறை
1) தொலைக்காட்சி ஊடகம் 2) இணைய ஊடகம் 3) சினிமா ஊடகம்
4) சமூக ஊடகம் 5) வானொலி ஊடகம்

27. சினிமா படைப்பாக்கம் ஒன்றின் கதைக்கரு அம்சம் தயாரிப்பதனோடு தொடர்பல்லாததனை வெளிப்படுத்துவது.
1) மனிதனுக்கும் மனிதனுக்குமிடையிலான விடயங்கள்
2) மனிதனுக்கும் சமூகத்திற்குமான விடயங்கள்
3) மனிதனுக்கும் உள்ளத்துக்குமான விடயங்கள்
4) மனிதனுக்கும் இயற்கைக்குமான விடயங்கள்
5) மனிதனுக்கும் விலங்குகளிற்குமான விடயங்கள்

28. ஒரு கட்புல படைப்பு ஒன்றினை இரசிக்கும் இரசிகர்களின் உள்ளத்தில் பல்வேறு எண்ணங்களினை உருவாக்கும் பொருட்டு கதாபாத்திரத்தின் அல்லது பொருளினுடைய நுட்பமான பண்புகள் உணர்வு வெளிப்பாடு என்பவற்றை வெளிப்படுத்த உதவும் கமரா காட்சி.
1) அண்மைநிலை எடுப்பு (Close up)
2) இடைநிலை நீள் எடுப்பு (Medium long shot)
3) இடைநிலை அண்மைக்காட்சி (Medium close up)
4) நீள் எடுப்பு (Long shot)
5) நெடுந்தொலை எடுப்பு (Very long shot)

29. பின்வரும் விடயங்களில் ஆற்றுகை அல்லது அறிகை எனும் அம்சத்துடன் தொடர்புபடாத அம்சம்.
1) இரசிகர்கள் முன்னிலையில் உருவாக்கப்படும் காட்சிவழி
2) உடல் மொழி முகபாவம் சலனம் என்பன இதிலடங்கும்
3) வாய்மொழி சாராத அம்சங்களினையும் உள்ளடக்கியிருக்கும்
4) பிறக்கும் காலத்தில் இறக்கும் தன்மையற்றது
5) பார்வையாளர்களினை உடன் எதிராக கொண்டது

30. நாட்டாரியல் என்பது அடிப்படை அல்லது சிக்கலான நிலமைக்குப்பட்ட நவீன அல்லது மக்கள் சமூகத்திற்கு இடையில் நீண்ட காலமாக வாய்மொழி வழியாக விருத்தியடைந்த ஒரு வளம்மிக்க செல்வமாகும் என வரையறை செய்த அறிஞரும் நூலும் முறையே.
1) சுனந்த மஹேந்திரா, தொடர்பாடல் ஓசை
2) நந்தசேனரத்னபால, நாட்டாரியல் விஞ்ஞானம்
3) ஸ்ரீ லியனகே, நாட்டாரியல் அகராதி
4) சுகதபால டி சில்வா, ஹன்ட் நலுவா
5) சுனந்த மஹேந்திரா, படைப்பாக்க ரீதியான தொடர்பாடல்



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

31. இலங்கையின் முதல் தொட்டறிய முடியாத பண்பாட்டு மரபுரிமையாக யுனஸ்கோ பிரகடனம் செய்த கலைவடிவம்.
1) சப்ரகமுவா, தொவில்
2) யாழ்ப்பாணம், காத்தவராயன் கூத்து
3) மட்டக்களப்பு, மகிடிக்கூத்து
4) மலையகம், கொகம்ப கங்காரியா
5) அம்பலாங்கொடை பொம்மலாட்டம்

32. அமெரிக்காவில் நடைபெற்ற வேலை நிறுத்தப்போராட்டங்களினை அடிப்படையாகக் கொண்டு உலகில் முதலாவது பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தினை ஆரம்பித்துக் கொண்ட நபர்.
1) எட்வர்ட் எல். பெர்ணீஸ்
2) ஐவி லீ
3) ரோட் ஹன்ட்ஸ்
4) ஜேம்ஸ் குருனிக்
5) ஜீலியஸ்சீசர்

33. பொதுமக்கள் தொடர்புச் செயற்பாடானது மேம்படுத்தல் செயல் ஒழுங்கில் ஒரு பிரிவாக காணப்படுகின்றது. மேம்படுத்தல் கலவை செயற்பாட்டோடு தொடர்புபடாத அம்சம்.
1) விளம்பரப்படுத்தல்
2) பிரசித்தப்படுத்தல்
3) உற்பத்தி செய்தல்
4) பொதுசனத்தொடர்பு
5) தனியாள் சந்தைப்படுத்தல்

34. ஏதேனும் ஓர் அமைப்புடன் தொடர்புடைய உள்ளக மற்றும் வெளியக அனைத்து தரப்பினருக்குமிடையிலும் பரஸ்பரப் புரிந்துணர்வை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் அனைத்துச் செயற்பாடுகளும் பொதுமக்கள் தொடர்பு ஆகும் என வரையறை செய்தவர்.
1) சார்ள்ஸ் பிளேகார்ட் (Charles placard)
2) எட்வர்ட் எல் பெர்ணீஸ் (Eaward .L. Bernays)
3) சாம் பிளக் (Sum black)
4) ஜோசப் ஆர் டொமினிக் (Joseph R. Dominick)
5) பிலிப் ஜே கிச்சன் (Philip J. kitchen)

35. இலங்கையில் அண்மையில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தமது எதிர்கால அரசியல் சார் நிலைப்பாடுகளினை மக்களுக்கு தெரிவிக்கும் முகமாக அனைத்து ஊடகவியலாளர்களினையும் ஒருங்கே அழைத்து விளக்கமளித்திருந்தனர் இச்செயற்பாட்டினை குறித்து நிற்பது.
1) உத்தியோக பூர்வ செய்தி அறிவிப்பு
2) ஊடக அறிவிப்பு
3) புகைப்பட அறிவிப்பு
4) ஊடக மாநாடு
5) தேர்தல் பிரச்சாரம்

36. அபிவிருத்தி என்பது வறுமை, சமமின்மை மற்றும் தொழிலின்மை முதலானவற்றை குறைத்தல் அல்லது இல்லாதொழித்தல் என வரைவிலக்கணப்படுத்திய அறிஞர்
1) டட்ளி சியர்ஸ்
2) விமல் திசநாயக்கா
3) எட்கர் ஒவ்வன்ஸ்
4) மகாத்மா காந்தி
5) போல் பி. ஸ்ரீவன்

37. இலங்கையில் உள்ள நாடோடி மக்கள் இலங்கையில் பண்பாட்டுப் பாரம்பரியங்களினை உள்வாங்கியுள்ளமையைக் காணக்கூடியதாயுள்ளது இது
1) பண்பாட்டுப் பரவுகையாகும்
2) பண்பாட்டு ஆர்முடுகலாகும்
3) பண்பாட்டு அதிர்வாகும்
4) பண்பாட்டு தேக்கமாகும்
5) துனைப்பண்பாட்டாக்கமாகும்

38. படைப்பாளி ஒருவருக்கு தனது சுய அடையாளத்தை நிலைநிறுத்துவதற்கு மிகவும் இலகுவானதாக அமைவது.
1) கவிதை வாசித்தலாகும்
2) ஓவியம் வரைதலாகும்
3) திரைப்படம் தயாரித்தலாகும்
4) மேடை நாடகத்திலாகும்
5) தொலைக்காட்சி தொடர் நாடகத்திலாகும்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

39. குறிமுறையவிழ்ப்புச் செயற்பாடொன்றினை குறிமுறையாக்கமாக மாற்றுவதற்கு ஏதுவாகும் காரணியை புலப்படுத்துவது
1) பின்னூட்டல் 2) தாக்கம் 3) உச்சஸ்தானம்
4) வாயிற்காப்பு 5) பொருட்கோடல்

40. அபிவிருத்திச் செயற்பாடுகளினை வலுவான தாக்கத்திற்கு அபிவிருத்திக்கான தொடர்பாடல் திட்ட அறிக்கையிடல் படிமுறைகள் அவசியமானவை ஆகும். அவற்றோடு தொடர்புபடாத அம்சம்.
1) அபிவிருத்திக்கான நிகழ்ச்சிகளை தயார் செய்தல்
2) அபிவிருத்திக்கான செயற்றிட்டங்களினை உருவாக்குதல்
3) அபிவிருத்திக்கான தொடர்பாடல் குறியீடுகளினை நிர்ணயித்தல்
4) அபிவிருத்திக்கான செலவீனங்களினை மதிப்பிடல்
5) அபிவிருத்திக்கான பங்குபற்றலினை உறுதிப்படுத்தல்

41. அபிவிருத்திக்கான நோக்கங்களோடு தொடர்புபடாத அம்சம்.
1) தேவைகளை மையப்படுத்தாத நடவடிக்கை
2) சுய நிர்ணயம்
3) தன்னம்பிக்கை
4) சிறந்த சூழலை கட்டியெழுப்பல்
5) பங்கு பற்றல் ஜனநாயகம்

42. இனங்களிற்கிடையே செய்தி பரவும் விதம் பற்றியம் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் செய்தி பற்றிய குறைவான அவதானம் மற்றும் யதார்த்தத்தை திரிபுபடுத்துவதற்கான போக்கு காணப்படுவதாக குறிப்பிட்ட அறிஞர்.
1) ஹேர்பட் ஷெல்லர் 2) சீன் மக்பிறைட்டின் 3) வில்பர் ஷ்ராம்
4) எட்கர் ஒவ்வன்ஸ் 5) ஹரோல் டி. லாஸ்வெல்

43. கொள்கை உருவாக்கத்தில் மக்கள் பங்குபற்றலை அதிகரிப்பதற்காக வெளிப்படைத்தன்மை, அரச பொறுப்பு, பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் ஊழலுக்கு எதிரான தகவலைப் பெற்றுக் கொள்ளும் உரிமை இலங்கையில் உறுதி செய்யும் சட்டம்
1) புலமைச் சொத்துசட்டம் 2) கருத்து வெளியீட்டுச் சுதந்திர சட்டம்
3) ஊடகத்தணிக்கை சட்டம் 4) தகவல் அறியும் சட்டம்
5) நியாயமான பாவனைக் கோட்பாட்டு சட்டம்

44. தொடர்பாடலின் போது தொடல்பாடுபவர் எதிர்பார்த்த பெறுபேற்றினை அடைந்து கொள்ளல் முக்கியமானதாகும். இது விதந்துரைக்கப்படுவது.
1) ஷ்ராம் - ஒஸ்கூட் மாதிரியிலாகும்
2) ஹரோல் டி. லாஸ்வெல்லின் மாதிரியிலாகும்
3) டேவிட் கே. பெர்லொவின் மாதிரியாகும்
4) ஷனோன் மற்றும் வீவரின் மாதிரியிலாகும்
5) அரிஸ்ரோட்டிலின் மாதிரியாகும்

45. அந்தரே வேதாளம் பற்றிய நாட்டார் கதையை வகுப்பறையில் கற்பித்த ஊடாக கற்கை பாட ஆசிரியர் கதையில் உங்களை மிகவும் கவர்ந்த ஒரு சந்தர்ப்பத்தை சித்திரமாக வரையுமாறு குறிப்பிட்டார். மாணவர்களிடமிருந்து ஆசிரியர் எதிர்பார்க்க கூடியது.
1) சித்திரம் பற்றிய திறனை அறிதல்
2) படைப்புத் தொடர்பாடல் திறன்களை அறிதல்
3) யாதாயினும் ஒன்றை நிச்சயமாக இனங்காணும் ஆற்றலை அறிந்து கொள்ளுதல்
4) கலை தொடர்பாக உள்ள விளக்கத்தை அவதானித்தல்
5) நாட்டார் கதை பற்றிய விளக்கத்தை இனங்காணுதல்



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

46. இலங்கையில் இலத்திரனியல் செய்திகள் மற்றும் இலத்திரனியல் ஊடக தொழிற்துறையின் தணிக்கைச் செயற்பாடு போன்றவற்றினை மேற்கொள்ளும் அல்லது ஒழுங்குபடுத்தும் அமைப்பு.
   1) இலங்கைப்பத்திரிகை பேரவை
   2) பொது அளிக்கை கட்டுப்பாட்டு சபை
   3) இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
   4) இலங்கை தொலைத்தொடர்புகள், ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
   5) இலங்கை கணினி அவசர சேவைகள் இணைப்பு நிலையம்

47. பின்வரும் அம்சங்களில் நிறுவனம் ஒன்றின் உள்ளகப் பொதுசனத் தொடர்புத்திட்டத்தோடு தொடர்புடைய அம்சங்களை மாத்திரம் கொண்ட தொகுதி.
   1) நலன்புரி அமைப்புக்கள், குறைகேள் அதிகாரி, பத்திரிகை, ஊடகமாநாடு
   2) ஊடகமாநாடு, நலன்புரி அமைப்புக்கள், சுற்றுலா, கூட்டங்கள்
   3) கூட்டங்கள், சுற்றுலா, ஊடகக் கலந்துரையாடல், பத்திரிகை
   4) சுற்றுலா, கலந்துரையாடல், நலன்புரி அமைப்புக்கள், உள்ளகத்தொலைபேசி
   5) வெளியகத்தொலைபேசி, சுற்றுலா, ஊடகமாநாடு, நலன்புரி அமைப்புக்கள்

48. ஐக்கிய நாடுகளின் சபை இடைத்தொடர்பு விருத்திக்கான தொடர்பாடல் பிரவேசங்களினை முன்வைத்துள்ளது. அவற்றோடு தொடர்புபடாத அம்சம்.
   1) நடத்தை மாற்றத்திற்கான தொடர்பாடல்
   2) சமூக மாற்றத்திற்கான தொடர்பாடல்
   3) பரிந்து பேசுவதற்கான தொடர்பாடல்
   4) பங்குபற்றுவதற்கான தொடர்பாடல்
   5) ஊடக மற்றும் தொடர்பாடல் சூழலை வலுவூட்டல் மற்றும் செயற்படுத்தல்

49. பாடசாலையின் ஊடகக்கழகத்தில் மாணவர்கள் சிலர் அபிவிருத்தி தொடர்பாடல் அவசியம் பற்றி தமது கலந்துரையாடலினை மேற்கொண்டனர்.

   வினித் - மக்களை அடிப்படையாகக் கொண்ட வானொலி நிகழ்ச்சிகளைத் தயாரித்தல்

   காஸ்ரோ - மக்களை அடிப்படையாகக் கொண்ட இயற்கை வள முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்றங்களிற்கு இசைவாதல்

   கரோலின் - விவசாயக் கண்டுபிடிப்புக்கள் மற்றும் உணவுப்பாதுகாப்பிற்கான நாட்டார் தொடர்பாடல் அமைப்புக்கள் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தைப் பயன்படுத்துதல்.

   மேற்குறிப்பிட்ட மாணவர்களின் கருத்து தொடர்பாக கவனம் செலுத்திய அமைப்பு.
   1) ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான மற்றும் பண்பாட்டு அமைப்பு (UNESCO)
   2) ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO)
   3) ஐக்கிய நாடுகளின், சிறுவர் நிதியம் (Unicef)
   4) அபிவிருத்திக்கான தொடர்பாடல் பற்றிய ரோம் மாநாடு.
   5) சுவீடன் நாட்டு மாலமோ பல்கலைக்கழகம்

50. தொடர்பாடல் செயன்முறையில் குளோட்ஷினொன் மற்றும் வொரன்வீவரின் வரைவிலக்கணத்தில் தலையாய அம்சமாக கருதப்பட கூடியது.
   1) தகவல் 2) இடையூறு 3) குறிமுறையாக்கம்
   4) பொருட்கோடல் 5) விளைவு

www.agaram.lk

FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, மார்ச் - 2020

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :- 13 (2020) | தொடர்பாடலும் ஊடககற்கையும் II | மூன்று மணித்தியாலம் மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம் |
|---|---|---|

## பகுதி II

**அறிவுறுத்தல் :-**

- ❖ **எவையேனும் ஐந்து வினாக்களிற்கு மாத்திரம் விடை தருக.**
- ❖ **ஒவ்வொரு வினாவிற்கும் இருபது (20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்)**

*01.* **"தொடர்பாடலானது காலத்துக்கு காலம் பல்வேறுபட்ட விடயங்களிற்கு ஊடாக வளர்ச்சி பெற்றுவந்துள்ளது"**

1) தொடர்பாடல் பற்றி அரசியல் தளத்தில் இருந்து விளக்கிய ஹரோல். டி. லாஸ்வெல்லின் விளக்கத்தை தருக?
2) தொடர்பாடல் செயற்பாட்டின் அடிப்படைக் கூறுகள் **நான்கினைக்** குறிப்பிட்டு **இரண்டு** பற்றி சிறுவிளக்கம் தருக?
3) இலங்கையில் தொடர்பாடல் கற்கை அறிமுகம் செய்தமை பற்றி விபரிக்குக?
4) குழுத்தொடர்பாடல் செயற்பாடு எவ்வாறு பொதுசனத்தொடர்பாடல் மற்றும் வெகுசனத் தொடர்பாடல் வழிமுறைகளில் இருந்து வேறுபடுகின்றது என்பதனை **நான்கு** விடயங்களிற்கூடாக ஆராய்க?

*02.* **தொடர்பாடலிற்கு ஆதாரம் தொடர்பாடல் விதிகள் ஆகும்.**

1) வாய்மொழித் தொடர்பாடலினை மேலும் வினைத்திறனாக்கிக் கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய திறன்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.
2) சாள்ஸ் ஒஸ்கூட் மற்றும் வில்பர்ஷ்ராம் மாதிரியானது அரிஸ்ரோட்டில் மாதிரியில் இருந்து வேறுபடுவதற்கு உரிய எடுத்துக்காட்டுக்கள் **நான்கினைக்** குறிப்பிடுக?
3) பாரம்பரிய ஊடகங்கள் சூழல்நேயம்மிக்க தொடர்பாடல் வழிமுறைகள் ஆகும். அந்த வகையில் பாரம்பரிய ஊடகங்களின் சிறப்பியல்புகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு உதாரணங்களுடன் விளக்குக?
4) பரந்துபட்ட மக்கள் கூட்டத்திற்கு ஒரே நேரத்தில் செய்தியை கடத்தி கொள்வதற்கு வெகுசன ஊடகங்கள் அவசியமானவை. அதனடிப்படையில் வெகுசன ஊடகங்களினால் மேற்கொள்ளப்படும் பணிகள் **நான்கினைக்** குறிப்பிட்டு விளக்குக?

*03.*

1) தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படும் போது சமூக ஊடகங்கள் தணிக்கை செய்யப்படுகின்றன. அவ்வாறான சந்தர்ப்பத்தினால் ஏற்படும் அனுகூலம் மற்றும் பிரதிகூலங்களினைதலா **இரண்டு** வீதம் குறிப்பிடுக?
2) பண்பாட்டியலின் வகைப்பாடுகளினை குறிப்பிட்டு பிரசித்த பண்பாட்டியலின் அம்சங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக?



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

3) ஊடகங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களில் இருந்து விடுபடுவதற்கு ஊடக விளங்கறிவு அவசியம், ஊடகவிளங்கறிவு என்றால் என்ன? என்பதனை **மூன்று** வரைவிலக்கணங்களினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க?

4) "ஊடகம், தனிநபர், சமூகம் மற்றும் பண்பாட்டின் மீது நேர் மற்றும் எதிரான வகையில் செல்வாக்குச் செலுத்துகின்றது" விமர்சன ரீதியாக ஆராய்க.

***04.***

1) விமர்சன ரீதியிலான பெறுநர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்புகள் **நான்கினைத்** தருக?

2) ஊடகத் தகவலொன்றைப் பகுப்பாய்வு செய்யும் போது பயன்படுத்தும் அடிப்படை அம்சங்கள் **நான்கினைக்** குறிப்பிட்டு **ஒன்றினை** விளக்குக?

3) உலகளாவிய ரீதியில் பல்வேறு நிறுவனங்கள் அபிவிருத்திக்கான தொடர்பாடலின் அவசியம் பற்றி தமது அவதானத்தை செலுத்தியுள்ளன. அவ்வாறான நிறுவனங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு அந்நிறுவத்தின் பணிகளினை **இரண்டினடிப்படையில்** சிறு விளக்கம் தருக?

4) பொதுமக்கள் தொடர்பாடலின் அவசியமான சந்தர்ப்பங்கள் **நான்கினை** குறிப்பிட்டு விளம்பரப்படுத்தல் எவ்வாறு பொதுசனத் தொடர்பாடலில் இருந்து வேறுபடுகிறது என்பதனை **மூன்று** அம்சங்களின் அடிப்படையில் விபரிக்குக?

***05.*** **"மனிதனுள் இயல்பாகவே புதிது புனைதல் ஆற்றல் உள்ளது"**

1) படைப்பாக்க ரீதியிலான தொடர்பாடல் என்றால் என்ன என்பதனை வரையறையாக்குக.

2) படைப்பாக்கத் தன்மையின் அடிப்படைக் கூறுகளினை பெயரிட்டு அவற்றில் ஒன்றுபற்றிச் சிறு விளக்கம் தருக?

3) பத்திரிகை ஊடகங்களில் படைப்பாக்க ரீதியிலான மொழி பயன்படுத்துவதற்கான எடுத்துக்காட்டுக்களை உதாரணங்களின் மூலம் விளக்குக?

4) திரைப்படமானது (சினிமா) எவ்வாறு வானொலி மற்றும் தொலைக்கட்சிகளில் இருந்து வேறுபடுகின்றது என்பதனை விமர்சன ரீதியாக ஆராய்க?

***06.***

1) படைப்பாக்கத் தொடர்பாடலில் முதன்மை பெறுகின்ற ஆற்றுகை ஒன்றின் அடிப்படை அம்சங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

2) பொதுமக்கள் தொடர்பாடலை விபரிப்பதற்கு பயன்படுத்திய **நான்கு** மாதிரிகளைக் குறிப்பிட்டு அவற்றில் **ஒன்று** பற்றி சிறு விளக்கம் தருக.

3) நிறுவனம் ஒன்றின் வெளியகப் பொதுசனத் தொடர்பிற்கான வழிமுறைகள் **நான்கினைக்** குறிப்பிட்டு வியாபார நிறுவனம், பொதுமக்கள் தொடர்பினை பயன்படுத்துதல் தொடர்பில் ஆராய்க?

4) நிறுவனம் ஒன்றின் பொதுசனத்தொடர்பு அதிகாரி (PRO) மற்றும் ஊடக அதிகாரி ஆகியோரிடம் காணப்பட வேண்டிய அம்சங்கள் **நான்கினைக்** குறிப்பிட்டு நிகழ்வு முகாமைத்துவத்தின் (Eventmanagement) முக்கியம் தொடர்பில் கருத்துரைக்குக?

***07.***

1) அபிவிருத்திக்கான தொடர்பாடல் பற்றி பறீநிவாஸ் ஆர்.மெல்கோட்டே (Srinivas R.Melkote) என்பவரால் முன்வைக்கப்பட்ட **நான்கு** அம்சங்களினைக் குறிப்பிடுக?

2) அபிவிருத்திக்கான தொடர்பாடலின்நோக்கங்களில் வறுமையை ஒழித்தல் அல்லது உள்ளூர் மயமாக்கல் தொடர்பில் கருத்துரைக்குக.

3) உங்கள் பிரதேசத்தில் காணக்கிடைக்கக்கூடிய அபிவிருத்திசார் பிரச்சினையொன்றினை இனங்கண்டு அதற்குப்பொருத்தமான அபிவிருத்தித்திட்டம் **ஒன்றை** முன்வைக்குக?

4) இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஊடகங்களின் பங்குபற்றலினை விமர்சன ரீதியாக ஆராய்க.



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!